1990 ஏப்ரல் 2]

தான் அதனுடைய தலைவர் இருக்க வேண்டும் என்பது நம்முடைய அழுத்தமான கொள்கையாகும். ஆனால், கடந்த காலத்தில் ஒருவருக்குப் பதிலாக இருவர், அவர்களே இருந்து கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதனை இந்த அரசு எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள இயலாது, தனியார், அதே நேரத்தில் கூட்டுத் துறை தொழிலைச் செய்ய முன் வந்தாலும் கூட அவர்களுடைய ஆதிபத்தியம் அதிலே நிலைக்க வேண்டும் என்பதற்கு அரசு என்றைக்கும் இடம் தராது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறை பணியாளர்கள் பணி நிமித்தமாக வெளியூர் செல்லும்போது கொடுக்கப்படும் தினப் படி.

*3046 திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காவல் துறையைச் சார்ந்த பணியாளர்கள் பணி நிமித்தமாக வெளியூர் செல்லும்போது கொடுக்கப்படும் அலவென்ஸை (D.A.) உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

பணி நிமித்தமாக வெளியூர் செல்லும்போது கொடுக்கப்படும் அலவன்ஸ் (D.A.) 5-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளுக்கிணங்க அரசாணை எண். 666, நிதித் துறை, நாள் 27-6-1989-ல் இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆணை காவல் துறையைச் சேர்ந்த பணியாளர்களுக்கும் பொருந்தும்.

(9.05 மணி)

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் காவல் துறையினருக்கு தற்போது வழங்கப்படும் அலவன்ஸ் இரண்டு மடங்கு என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்கள். இந்த இரண்டு மடங்கு என்பது சாதாரணமாக ஒரு நாளைக்கு 6 ரூபாய் என்று சொல்லப்படுகிறது. அப்படி என்றால் இன்றைக்கு 12 ரூபாய் தான் கிடைக்கும். ஆகவே இது போதுமானதல்ல. இதனால் பல தவறுகள் நடப்பதற்கும் வழி ஏற்படுகிறது. ஆகவே இதைக் குறைந்த பட்சம் 25 ரூபாய் அளவுக்காவது உயர்த்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிடுவார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்புக்கு வருவதற்கு

முன்பு 8 ரூபாய், 10 ரூபாய், 15 ரூபாய், 22 ரூபாய் என்ற அளவில் தினப் படிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. இப்போது இந்த அரசு பொறுப்புக்கு வந்து, கடந்த ஆண்டு 27-6-1989-ல் 3 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறுகின்றவர்களுக்குத் தினப் படி 44 ரூபாய். 1,400 ரூபாய் முதல் ரூபாய் 3,000 வரை ஊதியம் பெறுகின்ற அலுவலர்களுக்குத் தினப்படி 30 ரூபாயும், 950 ரூபாய்க்கு மேல் 1400 ரூபாய் வரை பெறுகின்றவர்களுக்கு 20 ரூபாயும், 950 ரூபாய்க்குள் ஊதியம் பெறுகின்றவர்களுக்கு 16 ரூபாயும் என்று ஏற்கெனவே இருந்த படியைவிட இரண்டு மடங்கு அதிகமாக வழங்கி வருகிறது.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காவல் துறையினருக்கு வழங்கப்படுகின்ற அலவன்சை இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகு உயர்த்தி இருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நன்றி. அதுபோல அவர்களுக்கு வழங்கப்படுகின்ற உடுப்பு வருடத்திற்கு ஒன்று மட்டும்தான் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறதே. அதை இரண்டு மடங்காக உயர்த்திக் கொடுப்பதோடு சலவை அலவன்ஸ், ஷேவிங் அலவன்ஸ் மிகக் குறைந்த அளவு மாதத்திற்கு 20 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். அவற்றையும் உயர்த்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிடுவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா அவர்களுடைய தினப் படியைப் பற்றி மாத்திரம் குறிப்பிடுகின்றது. மற்றபடி, தேவைக்கேற்ற படி தனிக்கேள்வி கேட்டால் பதில் அளிக்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் வெளியூருக்குச் செல்லும்போது அவர்களுக்கு உயர்த்தப்பட்ட அலவன்ஸ் எப்போது கொடுக்கப்படுகிறது? மிகத் தாமதமாக கொடுப்பதாகவும், பல மாதங்களுக்குப்பிறகும்கூட கொடுப்பதாகவும் கூறப்படுகிறது. அது உண்மை என்றால், அதை உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற குறைபாடுகளை விரைவில் களைவதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியூர் செல்லும்போது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த பேட்டா இரண்டு மடங்காக உயர்த்தியது இன்றைக்கு இருக்கின்ற விலைவாசியில் அவர்களுக்கு ஓரளவுக்கு நல்ல காரியமாகும்

ஆனால் உள்ளூர் வட்டத்திற்குள்ளே தங்களுடைய குடும்பத்திற்கு வந்து சாப்பிடவோ மற்ற காரியங்களோ செய்யமுடியாமல் தொடர்ச்சியாக பணியில் ஈடுப்பட்டிருப்பவர்களுக்கு மிகக் குறைவான தொகை கொடுக்கப்பட்டு வருவதாகச் சொல்லப் படுகிறதே, அது உண்மையா? அப்படியானால் அதை உயர்த்து வதற்கு ஏதாவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே அது உண்மையா, அல்லவா என்று தெரியாத நிலையிலேதான் கேள்வி எழுப்பி இருக்கிறார். நானும் அது உண்மையா, அல்லவா என்பதைப் பிறகு அறிந்துகொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 5323 மற்றும் 7682 ஆகியவை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கத் தள்ளி வைக்கப்படுகின்றன.

நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலங்களுக்கு வரி.

*409 திரு. கே. ஏ. மணி:

மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுககு விடையளிப்பாரா:

(அ) நில அளவை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (U.D.R.) அளவு செய்யப்பட்ட நிலங்களுக்கு எந்த அடிப்படையில் வரி விதிக்கப்பட்டுள்ளது?

(ஆ) இந்த வரி தள்ளுபடி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது வரியல்ல. நில அளவைக் கூலி, கற்கள் கிரயம், நிர்வாகச் செலவுகள் போன்ற எல்லா திட்டச் செலவுகளையும் சேர்த்து அதில் ஒரு பகுதி மட்டும் நில உரிமையாளர்களிடம் இருந்து கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இது மொத்தச் செலவில் சுமார் ஐந்தில் ஒரு பங்கு ஆகும். பொதுவாக இது நஞ்சை நிலத்துக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 58.70 என்ற நிலையிலும் புஞ்சை நிலத்துக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு சுமார் 29.60 என்ற நிலையிலும் இருக்கும். வட்டத்துக்கு வட்டம் கட்டண விகிதம் சற்றே மாறுபடலாம்.

(ஆ) இக்கட்டணம் வசூலிப்பதைத் தள்ளுபடி செய்ய இயலாது.

9.10 மணி

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின்கீழ் எல்லா நிலங்களுக்கும்